# அருப்புக்கோட்டை நகராட்சி

**சார்வரி ஆண்டு புரட்டாசி மாதம் நாள் : 21.10.2020 புதன் கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணகூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– G.அசோக்குமார் B.Com., PGDCA தனி அலுவலர்**

**பொருள் 1 :** ஆணையாளர், அவர்களின் அக்டோபர் – 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

அனுமதி வழுங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1031**

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளர், அவர்களின் அக்டோபர் – 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

அனுமதி வழுங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1032**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் அலுவலக கட்டிடம் (Computer Room) பழைய பேருந்து நிலையம் மற்றும K.V.பார்க் ஆகிய இடஙகளில் உள்ள கணினி வரிவசூல் மையஙகளில் உள்ள VPN Connection and connectivity charges ஆகியவற்றிற்கு 01.10.2019 முதல் 31.12.2019 முடிய ரூ.60466/– மற்றும் 01.01.2020 முதல் 31.03.2020 முடிய ரூ.60466/– மொத்தம் ரூ.120932/– யை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

வரிவசூல் அவசர அவசியம் கருதி கட்டணத்தொகையினை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1795/2012/இ2

**தீர்மானம் :**

அனுமதி வழுங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1033**

**பொருள் 4 :** கோவிட் –19 பொது ஊரடஙகின்போது செயல்படாத குத்தகை இனஙகளுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான காலஙகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் வரியில்லா இனஙகளில் கேட்பினை தள்ளுபடி செய்வதற்கு வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் துறை நாள் 02.09.2020 மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழுஙகலாம் ந.க.எண்.4431/2020/அ1

**தீர்மானம் :**

அனுமதி வழுங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1034**

**பொருள் 5 :** இந்நகராட்சி அலுவலக கணினி பிரிவிற்கு தேவையான உதிரி பாகஙகள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி அனுப்பக்கோரி கடிதம் அனுப்பியதில் கீழ்காணும் நிறுவனஙகளிடமிருந்து கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | தேவைப்படும் பொருட்கள் | எண்ணம் | விக்டெரி சிஸ்டம், சிவகாசி | ஸ்ரீ கம்ப்யூட்டர், மதுரை | ஜெனியூன் கம்ப்யூட்டர்ஸ், சிவகாசி |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | Canon 2002-2006 copier drum unit | 1 | 17600 | 17800 | 17700 |
| 2 | Canon NPG59 Toner | 1 | 2960 | 3200 | 3100 |
| 3 | 80 column ribbon cartridge | 1 | 209 | 450 | 309 |
| 4 | HP 55A Toner | 1 | 11880 | 12100 | 11990 |
| 5 | HP 88A Toner | 1 | 4510 | 4850 | 4650 |
| 6 | Antivirus | 1 | 500 | 800 | 600 |
| 7 | Keyboard wired | 1 | 750 | 1050 | 850 |
| 8 | Mouse wired | 1 | 350 | 650 | 450 |
| 9 | Firewall renewal licenses | 1 | 57800 | 58000 | 57900 |
| 10 | Canon image class toner (326 Toner) | 1 | 4750 | 4950 | 4850 |
| 11 | Canon fixing pressure roler copier | 1 | 5200 | 5400 | 5300 |
| 12 | Web Camara | 1 | 2850 | 3200 | 3100 |
| 13 | Headphone with Mic | 1 | 900 | 1100 | 1000 |
| 14 | Speaker | 1 | 950 | 1150 | 1050 |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள விக்டரி சிஸ்டம் சிவகாசி அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
2. மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.3463/2020/பி4

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1035**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு E பிளாக் 4, நகரளவு எண் 8/5A1A (சர்வே எண் 24/5)) மற்றும் 10/1A1 பகுதி, 1A2 பகுதி (சர்வே எண் 46/1 பகுதி) ல் 3–39 ஏக்கர் (13718.82சமீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78, 172 H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்தக் கோரி திரு.ரா.பாலசுப்பிரமணியன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(விருமா) எண் 05/2020 நாள் 17.09.2020ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள பூங்கா மற்றும் சாலைகளை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3732/2020 நாள் 28.08.2020ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்கள் வழியாக நகராட்சிக்கு தானமாக மனுதாரரால் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூங்காக்களை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4215/2020/எப்1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1036**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள ஸ்கார்பியோ வாகனம் TN67AJ2135 சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை சேப்பாக்கம் அருகில் விபத்துக்குள்ளானதற்கு வாகனத்தில் ஏற்பட்ட பழுது பணி மேற்கொள்ள மகேந்திரா கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s.Shangalaya Motors மூலம் பழுது பணி மேற்கொள்ள ஆகும் செலவின தொகை ரூ.650744/–க்கு இம்மன்ற தீர்மான எண் 954, நாள் 05.06.2020 ல் அனுமதி பெறப்பட்டது.

மேற்படி வாகனத்தில் உள்ள பழுது பணிகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு இறுதி பட்டியலில் ரூ.797053/– வரப்பெற்றுள்ளதால் கூடுதலாக உள்ள வித்தியாச

தொகை ரூ.146309/—யை வருவாய் நிதியின் கீழ் செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2369/2020/இ2

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1037**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு A, பிளாக் 12, நகரளவு எண் 12/14B, 12/7A மற்றும் 12/8Aல் சுந்தரமூர்த்தி மடம் டிரஸ்டிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்திடவோ அவ்விடத்தில் அமைப்பின் தன்மையை மாற்றம் செய்வதற்கு எந்தவிதமான அனுமதியும் வழங்கக்கூடாது என திரு.S.ரெங்கராஜ் என்பவர் இடைக்காலத் தடை அனுமதி கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்ச் கிளையில் WP (MD) No.13615/2020 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களை 2வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதற்கு உயர்நீதி மன்றத்தில் நகராட்சி சார்பாக திரு.N.திலீப்குமார் வழக்கறிஞர் ஆஜராகவும் அதற்கான வழக்கு கட்டணத் தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3988/2020/எப்1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1038**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பகுதிகளில் உள்ள வார்டு எண் 15, திருமேனிமடத்துத்தெரு கடை எண் 3க்கு 21.10.2020 அன்று மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. ஏலக்கேள்விகள் மட்டுமே பெறப்பட்டன. கோரப்பட்ட ஏலக்கேள்விகள் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரரின் பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | K.ரத்தினசபாபதி | ரூ.2200/— |
| 2. | S.மனோகரன் | ரூ.2150/— |

மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை ரூ.2200/—யை திரு.K.ரத்தினசபாபதி என்பவர் கோரியுள்ளார். எனவே திரு.K.ரத்தின சபாபதி என்பவரது ஏலக்கேள்வித்தொகை ரூ.2200/—யை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

1. மேற்படி கடை எண் 3, கடந்த 16.11.2018ம் தேதியிலிருந்து காலியாக இருப்பதாலும், மேற்படி கடைக்கு 04.12.2018, 27.12.2018, 22.01.2019, 19.02.2019, 14.03.2019, 12.06.2019, 02.07.2019, 12.07.2019, 08.08.2019, 19.08.2019, 31.12.2019, 06.02.2020, 10.03.2020, 28.04.2020, 20.08.2020, 30.09.2020 ஆகிய தேதிகளில் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் எவரும் வைப்புத்தொகை செலுத்த முன்வரவில்லை.
2. மேலும் மேற்படி கடையின் பழைய வாடகைத் தொகை ரூ.1659/— லிருந்து 21.10.2020 அன்று நடைபெற்ற ஏலக்கேள்வித்தொகை ரூ.2200/— 20 % சதவீதத்திற்கு அதிகமாக இருப்பதால் மேற்படி ஏலக்கேள்வி தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5687/2018/அ1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1039**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் மின்பணியாளராக பணிபுரிந்துவரும் திரு.ரா.விக்னேஷ் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரியுள்ளார். தனியர் இந்நகராட்சியில் 07.01.2014 முதல் மின்பணியாளராக பணியில் சேர்ந்து தற்போது வரை தொடர்ந்து பணியாற்றிவருகிறார். அன்னாரின் மீது இந்நகராட்சியில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லாமல் சிறந்தமுறையில் பணியாற்றிவருகிறார். தனது குடும்ப சூழ்நிலை காரணமாக சொந்த விருப்பத்தின் பேரில் இந்நகராட்சியிலிருந்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரியதை அனுமதித்து மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4702/2020/சி1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1040**

**பொருள் 11 :** மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 397/செ.ம.தொ.அ/2020 நாள் 21.09.2020ன் படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை ‘‘வணக்கம் இந்தியா’’ நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.9,500/– ஐ Vanakkam India, Madurai நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண்.2775/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1041**

**பொருள் 12 :** மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 408/செ.ம.தொ.அ/2020 நாள் 25.09.2020ன் படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை ‘‘மாலை மலர்’’ நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ.13,125/– ஐ Maalai Malar, Madurai நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண்.2775/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1042**

**பொருள் 13 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பணிக்கு தேவைப்படும் குழாய் உதிரிபாகங்கள், வால்வு ஆகியவற்றை இருப்பில் வாங்கி வைப்பதற்கும் மற்றும் நெடுங்சாலைத்துறை சாலையில் (தமிழ்மணி தியேட்டர் அருகில்) குழாய் இணைப்புக்காக தோண்டிய சாலையை சரிசெய்யும் பணி உத்தேச செலவீன தொகை ரூ.1.60 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.1009, நாள்.31.08.2020 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 01.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 11.06% மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.S.K.சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை | 2.29% மதிப்பீட்டு விலையை விட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 2.29 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.S.K.சுப்பாரெட்டியார், அருப்புக்கோட்டை ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3613/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதி வழஙகப்படுகிறது.

**தீர்மான எண்.1043**

**பொருள் 14 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட தாமிரபரணி நீரேற்று நிலையத்தில் உள்ள 15HP ஓபன்வெல் நீர்மூழ்கி மின்மோட்டாரின் எண்–II ல் மோட்டர் முற்றிலும் பழுதாகி உள்ளதால் புதியதாக 15HP ஓபன்வெல் நீர்மூழ்கி மின்மோட்டார் வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழஙகலாம். ந.க.எண்.4221/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதி வழஙகப்படுகிறது.

**தீர்மான எண்.1044**

**பொருள் 15 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் குடிநீர் விநியோக மெயின் குழாய் இல்லாத பகுதி, விரிவாக்க பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோக மெயின் குழாய்கள் பதிக்கும் பணி உத்தேச செலவீன தொகை ரூ.9.80 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.1008, நாள்.31.08.2020 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 2.50% மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.K.காமாட்சிராஜன் | 0.05% மதிப்பீட்டு |

அருப்புக்கோட்டை விலையை விட குறைவாக

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.05 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.K.காமாட்சிராஜன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.3616/2020/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>தீர்மான எண்.1045</u>**